6 JUN 2000
மாநகராட்சி
யாழ்ப்பாணம் பக்கங்கள் நான்கு


# வலம்புரி
VALAMPURI

விலைரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 வைகாசி 24 செவ்வாய்க்கிழமை (06 - 06 - 2000) VALAMPURI ஒலி: 169


## ★ வெற்றிலைக்கேணிக் கடற்பரப்பில்

# கடற்படை; கடற்புலிகள் கடுஞ்சமர்

# டோறாப்படகு மூழ்கடிக்கப்பட்டது!

## 11 கடற்படையினர் மீட்கப்பட்டனர்

(கொழும்பு)

வெற்றிலைக்கேணிக் கடற்பரப்பில் ரோந்து சென்றுகொண்டிருந்த கடற்படையினருக்கும் விடுதலைப்புலிகளின்கடற்புலிகள் அணிக்கும் இடையே இடம்பெற்ற கடுமையான சண்டையில் கடற்படையினரின் இஸ்ரேல் தயாரிப்பான அதிவேகடோறா பீரங்கிப் படகுகள் இரண்டு அழிக்கப்பட்டதாகவும், விடுதலைப்புலிகளின் நான்கு படகுகள் அழிக்கப்பட்டதாகவும், பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

டோறாப் பீரங்கிப் படகுகளில் இருந்த 23 கடற்படையினரைக் காணவில்லை என்றும் 11 பேர் மீட்கப்பட்டனர் என்றும் பாதுகாப்பு அமைச்சகம் மேலும் தெரிவித்துள்ளது.

வெற்றிலைக் கேணி கடற்பரப்பில் ரோந்து சென்ற கடற்படையினர் விடுதலைப் புலிகளின் படகுகளை அவதானித்து அப்படகுகள் மீது தாக்குதல் தொடுத்தனர்.

இத் தாக்குதலை அடுத்து கடற் படையினருக்கும் விடுதலைப்புலிகளின் கடற் புலிகளுக்குமிடையே கடும் சண்டை மூண்டது.

நீண்டநேரம் நடைபெற்ற இச் சண்டையின் போது கடற் புலிகளின் 4 படகுகளை கடற் படையினர் தாக்கியழித்தாக பாதுகாப்பு அமைச்சகம்தெரிவித்திருக்கும் அதே வேளை

(4ஆம் பக்கம் பார்க்க)

## 70 வயதுடைய வயோதிபமாது பாலியல் வல்லுறவுக்குள்ளான நிலையில் யாழ். வைத்தியசாலையில் அனுமதி!

### சந்தேகத்தின் பேரில் இரு இராணுவம்கைது

(யாழ்ப்பாணம்)

கரந்தன் பகுதியில் 70 வயது நிரம்பிய வயோதிப மாது ஒருவர் இராணுவத்தினரால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மகன் முன்னிலையில் இராணுவத்தினரால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட வயோதிப மாதிடம் இருந்து 69,200 ரூபா பெறும [2ம் பக்கம்பார்க்க]

## உலர்உணவு விநியோகம், செயலகத்தில் நாளை முக்கிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்தோருக்கான உலர் உணவு சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறுமென அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் அறிவித்துள்ளார்.

உதவி அரசாங்க அதிபர் [4ஆம் பக்கம் பார்க்க]

## நோர்வேயின் சமாதான முயற்சியில் புலிகளும் இணைந்து கொள்ளலாம்

### ஜனாதிபதி அறிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளை யுத்த முனையில் தோற்கடிக்க தெளிவான போர்த்திட்டம் ஒன்று அரச படைகளிடம் இருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும்தெரிவிக்கையில் இனப் பிரச்சினை தீர்வு குறித்து நோர்வே அரசுமேற்கொண்டு வரும் சமாதான முயற்சிகளில் விடுதலைப் புலிகளும் இணைந்து கொள்ளலாம் என்றும் தெரிவித்தார்.

முன் நிபந்தனையற்ற பேச்சிற்கு இடமில்லை என்றும் எனினும் இது விடயம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டு செய்தி ஊடகங்கள் மீதான தணிக்கை நீக்கம்

வெளிநாட்டு செய்தி ஊடகங்கள் மீதான தணிக்கையை நீக்கியுள்ளதாக தகுதி வாய்ந்த அதிகாரியும் தகவல் துறைப்பணிப்பாளருமான ஆரியருபசிங்க தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் வெளிநாட்டு ஊடகங்களுக்கு செய்திகளை அனுப்புவதற்கு தகுதி வாய்ந்த அதிகாரியிடம் முன் அங்கீகாரம் பெறத் தேவையில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [ச-7]

## வெற்றிலைக்கேணியில் உயிரிழந்தோர்

வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்குமிடையே நேற்று இடம்பெற்ற கடுமையான சண்டையின் போது புலிகளின் தரப்பில் உயிரிழந்தவர்களின் விபரம் வருமாறு

★ சசிகரன் / ஆண்டான் (முத்துக்குமார் சதீஸ்குமார்) யாழ்ப்பாணம்

★ குய்க்குமாரன் (குலசேகரம் செல்வகுமார்) யாழ்ப்பாணம்

★ குட்டிக்கண்ணன்

(4 ஆம்பக்கம் பார்க்க)

## வழமைபோல் பாடசாலை பஸ்சேவை

(புலோலி)

வடபிராந்திய போக்குவரத்துச்சபை பருத்தித்துறை டிப்போ திங்கட்கிழமை முதல் பாடசாலை பஸ் சேவைகளை நடத்திவருகின்றது பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி. பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை உட்பட பாடசாலைகள் வழமை போல் நடைபெற்று வருகின்றன: (52)

## விளக்கமறியலில் வைக்க உத்தரவு

(யாழ்ப்பாணம்)

குருநகரிலுள்ள யாழ் செயலக புனர்வாழ்வு பகுதியின் உணவுக் களஞ்சியம் உடைக்கப்பட்டு திருடப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட 37 சந்தேக நபர்கள் யாழ் நீதிவான் நீதிமன்றத்தில் பதில் நீதிவான் முன்னிலையில் நேற்று முன் தினம் ஆஜர் செய்யப்பட்ட

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ், பிரதேச செயலர் பிரிவில் அமுல் படுத்தப் பட்டிருக்கும் ஊரடங்குச் சட்டம் இன்று காலை 7.00 மணியிலிருந்து பிற்பகல் 4.00 மணி வரை தளர்த்தப்பட்டிருக்கும்.

யாழ். பிரதேச செயலர் பிரிவு தவிர்ந்த யாழ் குடா நாட்டின் தீவுப்பகுதி உட்பட ஏனைய பகுதிகளில் இன்று அதிகாலை 5 மணிக்குஊரடங்கு தளர்த்தப்பட்டுமீண்டும் இன்று இரவு ஏழு மணிக்கு அமுல் படுத்தப்படும் என்று யாழ். பாதுகாப்பு நடவடிக் கைத்தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது. [க-வ]

## யாழ்நகர் பாடசாலைகள் நேற்று கணிசமான மாணவர்களுடன் இயங்கின

(யாழ்ப்பாணம்)

ஊரடங்கு தளர்வையடுத்து யாழ். நகரின் முன்னணிப் பாடசாலைகளில் நேற்று கணிசமான அளவு மாணவர்கள் வந்திருந்தனர்.

யாழ். மத்திய கல்லூரி இந்து மகளிர் கல்லூரி, யாழ். இந்துக்கல்லூரி, யாழ். வேம்படிமகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளை அண்டியுள்ள க. பொ. த. (உயர் தரம்) மற்றும் சாதாரண தரத்தைச் சேர்ந்த மாணவர்கள் கணிசமான அளவு சமுகம் கொடுத்தனர்.

பாடசாலை பஸ் சேவைகள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சி தபாலகங்கள் இயங்கும் இடங்கள்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பகுதியில் சாவகச்சே யில் இயங்கிவந்த தபாலகம் வரணியிலும். கைதடியில் இயங்கிவந்த தபாலகம் கோப்பாயிலும், பளையில் இயங்கிவந்த தபாலகம் கரவெட்டியிலும் இயங்கிவருவதாக யாழ். பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை யாழ்.பிரதம தபால் கந்தோர் தற்போது காலை 8 மணி முதல்

(4 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சின்னஞ்சிறு விளம்பரம்

## இறைச்சிக் கோழி விற்பனை

Broiler, Cullbirds, Cockerels இறைச்சிக்கோழிகள் சுத்தம்செய்து [பாதிக்கோழி உட்பட] தினமும் பெற்றுகொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை [நல்லூர் வீடியோ சென்ரர் ஒழுங்கை]முத்திரைச் சந்தையடி நல்லூர்.

[747]

## இறைச்சிக் கோழி தேவை

Broiler இறைச்சிக் கோழிகள் தேவை. தொடர்பு- தனபாலசிங்கம் 19.முருகேசர் ஒழுங்கை [நல்லூர் வீடியோ சென்ரர்வளவு) முத்திரை சந்தையடி. நல்லூர்.

[746]

## தவறிவிட்டது

தர்மலிங்கம் லோகேந்திரன் ஆகிய எனது விசேட அடையாள அட்டை இல:- 090 2028486. 1-6-2000 அன்று திருநெல்வேலி சந்தைக்கும் மருதனார்மடம் சந்தைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் திருநெல்வேலி கலா சாலை வீதியில் இருக்கும் தாஸ் கடையில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(713)

## தொல்புரத்தில் ஊரடங்கு தளர்வு

தொல்புரம், வளக்கம்பரை முத்துமாரி அம்மன் கோயில் மகோற்சவம் இன்று ஆரம்பமாவனதைத் தொடர்ந்து தொல்புரம், சுழிபுரம், பண்ணாகம், மூளாய், சித்தன்கேணி ஆகிய பகுதியில் இன்று முதல் எதிர் வரும் 19 ஆம் திகதிவரை இரவு 8 மணி வரை ஊரடங்கு தளர்த்தப் பட்டிருக்கும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவுடன் வலிமேற்கு பிரதேச சபைத்தலைவர் என் திரிலோகநாதன் தொடர்பு கொண்டதை யடுத்து இவ்வொழுங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ந)

## பாலியல்...

தியான நகைகளும் 4400 உரொக்கப்பணமும் கொள்ளையடிக்கப் பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 31ம் திகதி இடம் பெற்ற இச்சம்பவம் தொடர்பாக கோப்பாய்ப் பொலிசார் இரண்டு இராணுவத்தினரைக்கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட அபேசிங்க முதியான் சலாகே அனில் காமினி, களுபண்டா கேகசந்த குமார கேரத் ஆகிய இரு இராணுவத்தினரும் யாழ். மாவட்டப் பதில் நீதவான் க. கேசவன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட போது சந்தேக நபர்களை இம்மாதம் 19ம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு அவர் உத்தர விட்டார்.

(வ)


லஷ்சுமி
(இணுவில்)
2வது வெற்றி வாரம்
விஜய் ஜோதிகா
நடித்த
குஷி
10.30 - 2.30 [பு.நே]
(423)


## அவசர கலந்துரையாடல்

2ம்வருட கலைப்பீட மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் 06-06-2000 செவ்வாய்க்கிழமை பி.ப.1.00மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும் அனைவரும் கலந்துகொள்ளவும்.

2 ஆம் வருட பிரதிநிதி

(741)

## எட்டாம் நாள் நினைவஞ்சலி

எமது நண்பன்
செல்வன்

### சிவசுப்பிரமணியம் கமல்றாஜ்

அன்பின் ஆணிவேராய்
அரவணைப்பில் அன்னையாய்
பண்பில் உத்தமனாய்ப்
பவனிவந்த நண்பனே!
காலத்தின் காலன் உன்னைக்
காவு கொண்டு போனதெங்கே
கண்ணீரால் அஞ்சலியிட்டுக்
கதறுகின்றோம் நாங்களிங்கே
வேறென்ன செய்ய இயலும்.
உன் ஆத்ம சாந்திக்காய்
இறைவனை இறைஞ்சி நிற்கும்

**இணைபிரியா நண்பர்கள்**

இவரின் பிரிவால் துயருறும் இவரது அன்னைக்கு எம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(கி-431)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சண்முகலிங்கம் மகாலட்சுமி

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 29-10-1938 | 19-05-1999 |

**திதி: சதுர்த்தி:06-06-2000**

அன்பின் திருவுருவாய் அணையா
ஒளிவிளக்காய் இருந்து
எமக்கு வழிகாட்டிய அன்புத்தெய்வமே
ஆண்டுகள் பல சென்றாலும்
ஆறாது எம் துயரம்
உங்கள் அன்புமுகத்தை எப்போ
காண்போம் இனி.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பறாளாய் முருகனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!சாந்தி!

உங்கள் துயரால் வாடி வதங்கும்
**அன்புக் கணவன்.**
**பிள்ளைகள், மருமக்கள்**
**பேரப்பிள்ளைகள்.**

சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம்.
(கி-432)

## BEACON

(வெலிங்டன் சந்திக் கருகாமை)
யாழ்ப்பாணம்

**கணக்கீடு திரு. பாலவாசன்**

பகல் நேர வகுப்புக்கள்
ஆரம்பம்- 7-6-2000 புதன்- 10 மணி

ஏனைய சகல வகுப்புக்களும் சனி, ஞாயிறுவழமையான நேர, அட்டவணைப்படி நடைபெறும். சகல ஆசிரியர்களையும், சகல மாணவர்களையும் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

நிர்வாகி

(730)

## ஆத்மார்த்த அஞ்சலி

### திருமதி செல்லத்துரை பவளரத்தினம்

(ராணி வாகன உரிமையாளர்)

கொக்குவில் மேற்கைச் சேர்ந்தவரும் கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய நிர்வாகசபை உறுப்பினரும் மேற்படி ஆலயத்திருப்பணிகள் பலவற்றில் முன்னின்றுழைத்தவருமான திருமதி செல்லத்துரை பவளரத்தினம் அவர்கள் 05-06-2000திங்கட்கிழமை இறையடி சேர்ந்தார். அவரது ஆத்மா மஞ்சவனப்பதி முருகப் பெருமானது பாதார விந்தங்களை அடைந்து சாந்தி பெறபிரார்த்திக்கின்றோம்.

இ- இராசலிங்கம்
செயலாளர்
மஞ்சவனப்பதி முருகன் ஆலய
நிர்வாகசபை

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்,
(744)

## ஆத்மா சாந்திப் பிரார்த்தனையும் கிரக யக்ஞமும்

### பொன்னுத்துரைக் குருக்கள் பேரானந்த சர்மா

கொழும்பில் இறைபதம் அடைந்த

பொன்னுத்துரைக்குருக்கள் பேரானந்த சர்மாவின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையும், கிரகயக்ஞமும் (07-06 2000)புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத் தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து ஷ்டி பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**மனைவி, பிள்ளைகள்,**
**தாய், சகோதரர்கள்**

''கோகுலவாசம்''
துன்னாலை,
கரவெட்டி.

(கி 433)

## மரண அறிவித்தல்கள்

### இராஜரெட்ணம் இராஜேஸ்வரி

[மானிப்பாய்]

மானிப்பாய் தெற்கு அதிகார் செல்லமுத்து வீதியில் வசிக்கும் இராஜரெட்ணம் இராஜேஸ்வரி நேற்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற இராஜரெட்ணத்தின் அன்பு மனைவியும, இந்திரா, ரவிக்குமார், சுரேஷ்குமார், ஆகியோரின் அன்புத்தாயாரும், அருந்ததி, ஷாயினி, ஆகியோரின் அன்பு மாமியாரும், செந்துரன், சுஜானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பசுபதி சுப்பிரமணியம், குலரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், தேவிமனோகரி, புஷ்பராணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்
இந்திரா
[மகள்]

[கி / 440]

### செந்திவேலாயுதம் தேவமனோகரி

மானிப்பாயை பிறப்பிடமாகவும் இமையாணன் மேற்கு, உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட செந்திவேலாயுதம் தேவமனோகரி 04-06-2000 (ஞாயிற்றுக்கிழமை) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா இரத்தினம் தம்பதியினரின் அன்புப்புதல்வியும், அருணாசலம் செந்திவேலாயுதத்தின் அன்புமனைவியும் துஷ்யந்தன் (ஜேர்மனி) பிரிந்தன் (சப்ரகமுவ பல்கலைக்கழகம் 1ம் வருட கலைப்பிரிவு மாணவன்) நிசாந்தன், கீர்த்திகா, றமணன் ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரது பூதவுடல் நேற்று மாலை[05-06-2000 திங்கட்கிழமை 8 மணியளவில் இறுதிக் கிரியைகளுக்காக குடும்பமயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
**செந்திவேலாயுதம்**
**கணவர்**
கிரா. றான்ஸ்போட்

துவாளி வீதி,
இமையாணன் மேற்கு.
உடுப்பிட்டி

[கி 434]

தன்னை ததான் காக்கின்
சினம் காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்
- குறள்

# வலம்புரி

## பணியும் பணிவும்

இன்றைய சூழ்நிலையில் இன்னலும் இடரும் இதயத்தைப் பிழிந்து கொண்டிருக்கின்றன என்பதை யாவரும் மனிதப் பண்போடு சிந்திக்க வேண்டும். சினமும் அசிரத்தையும் பணிக்கு பரம விரோதிகள் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். துன்பங்கள் பலவற்றைச் சுமந்து நிற்கும் உலகியலை நோக்கும் போது பல்வேறு மட்டங்களில் கல்வியை, தகுதியை, வகிக்கும் பதவியைக்கருத்திற் கொள்ளாது சினந்து சீறுவது புலனாகிறது. பணிந்து பணி செய்யும் காலமிது என்பதை சம்பந்தப்பட்ட அனைவரும் அகங் கொள்ள வேண்டும்.

எரிபொருள் தட்டுப்பாடு பலவகையில் வாகன உரிமையாளர்களை வாட்டுகின்றது. அனுமதிப் பத்திரம் பெறுதல், சோர்ந்துபோன உள்ளங்களோடு நீண்ட நெடும் வரிசையில் நிற்றல், சட்ட விதிகளோடு விளக்கமில்லா சட்ட விதிகள் கிளைத்து முளைத்தல், எனப் பலவாம். ஆண்டியும் அரசனும் என்ற வேறுபாடற்ற நிலை உருவானால் மகிழலாம். மேதைகளும் பேதைகளும் ஒன்றெனக் கருதமுனைந்தால் பேதைகளால் மண் மலிந்து போகும். மருத்துவமனையில் 50 வயதிற்கு மேற்பட்டோர்க்கு மருந்துவிநியோகம் தனித்துவமாக நடைபெறுவது பாராட்டுக்குரியது. நல்லனஎத் துறையிலும் புகுவது நல்லது தானே.

சர்வமும்துன்பமயமாகவிருக்கும் இவ்வேளையில் பரஸ்பர புரிந்துணர்வு வேண்டும். பணிபெறுவோரும் பணியைநிர்வகிப்போரும் ஒன்றித்த நிலையில் புரிந்துணர்வோடு செயற்படவேண்டும், வேகும் வெயில்போல்வாழ்க்கைப் பாதை சுடுகின்றவேளை தர்க்கவாதம் புரிய முடியாது புரிவதும் கூடாது.

சிந்திப்போம் சகித்துக் கொள்வோம்என்றபுனித நிலைஒவ்வொருவருக்கும் கைவரவேண்டும். இனிய உளவாகஎன்றவள்ளுவன் பக்கம் சிறிது சாய்வோம் முகமலர்ந்து முடியாமையைக்கூட புரியவைக்கலாம் வெடிக்கும்ஷெல்களின்மத்தியில் வாழ்வதால் வெடுசுடுப்பு எம்மைப் பற்றிக் கொள்ளவேண்டுமா? அன்பின் வழியது உயிர் நிலை என்பதை மறந்து விடல் கூடாது.

- அன்புடன்! ஆசிரியர்

---

அச்சுவேலி

## காட்டுமலைக் கந்தசுவாமி கோவில்

# வருடாந்த மகோற்சவம் -2000

### விசேட உற்சவ காலங்கள்

7-06-2000 (புதன்) கொடியேற்றம்
11-06-2000 (ஞாயிறு) உருத்திரநாயகி உற்சவம்
16-06-2000 (வெள்ளி) மஞ்ச உற்சவம்
21-06-2000 (புதன்) அமிர்தவல்லி உற்சவம்
25-06-2000 (ஞாயிறு) தண்டாயுதபாணி உற்சவம்
28-06-2000 (புதன்) கார்த்திகை உற்சவம
29-06-2000 (வியாழன்) சப்பற உற்சவம்
30-06-2000 (வெள்ளி) இரதோற்சவம்
01-07-2000 (சனி) தீர்த்தோற்சவம்
02-07-2000 (ஞாயிறு) பூங்காவனம்
03-07-2000 (திங்கள்) வைரவர் உற்சவம்

குறிப்பு: பகல் உற்சவங்கள் முற்பகல் 10 மணிக்கும் இரவு உற்சவங்கள் மாலை 4 மணிக்கும் நடைபெறவுள்ளன.

காட்டுமலை வீதி,
நாவலம்பதி அச்சுவேலி.

ஆலய தர்மகர்த்தா,
சீ. சிவகுரு ஐயர்.

(722)

---

## இன்று கொடியேற்றம்

கொக்குவில் கிழக்கு நந்தாவில்கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. (வ)

## மகோற்சவம்

சரித்திர பிரசித்தி பெற்ற உரும்பிராய் கற்பகவிநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம விமரிசையாக ஆரம்பமாகியுள்ளது.

புன்னாலைக்கட்டுவன் ஆயற்கடவைப்பிள்ளையார் ஆலய மகோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமையும் இணுவில் ஸ்ரீ கந்தசாமி ஆலய மகோற்சவம் நாளை புதன் கிழமையும் ஆரம்பமாகவுள்ளன. (து-சி)

## நீதிவான் நியமனம்

மல்லாகம் மாவட்ட நீதிபதி பா. சுப்பிரமணியம் யாழ். மாவட்ட மேலதிக நீதிவானாகவும், யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதியாகவும் இம் மாதம் முதல் நியமனம் பெற்றுள்ளார்.

---

## தேடுகிறோம்

தபாற்கந்தோர் வீதி சாவகச்சேரியைச்(மகளிர் கல்லூரி அருகாமை) சேர்ந்த திருமதி காமினி வன்னியசிங்கம் பற்றிய விபரம் தெரிந்தவர்கள பின்வரும் விலாசத்துடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

வீ. சோமசுந்தரம்(ஆசிரியர்)
இராசவீதி சந்தி,
கோப்பாய் தெற்கு.

750½

---

## சிற்றி மிஷன் தொழிற் பயிற்சி நிலைய ஆசிரியர், மாணவரின் கவனத்திற்கு

மேற்படி நிலையத்தில் கல்விகற்பிக்கும் தொழிற் பயிற்சிநிலைய ஆசிரியர்களும் மற்றும் கல்விபயிலும் மாணவர்களும், தமிழ்,ஆங்கிலதட்டெழுத்து ஆசிரியர்களும் ,மாணவர்களும புதன்கிழமை(07-06-2000) காலை9.30 S L I )இணுவிலில் உள்ள மைக்லொயிட் வைத்தியசாலையில் நடைபெறும கலந்துரையாடலில் பங்குபற்றும்படி கேட்டுக் கொள்கிறேன்.

அருட்திரு S C ஆனல்ட்

(715)

---

## கலந்துரையாடல்

4ம் வருட(A)பிரிவு கலைப்பீட மாணவர்கட்கான

விரிவுரைகள் சம்பந்தமான கலந்துரையாடல் 06-06-2000 (செவ்வாய்க்கிழமை) காலை 9-00 மணியளவில் நடைபெறும். தயவு செய்து இடம் பெயர்ந்த மாணவர்களும் பங்குபற்றவும்.

கலைப்பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.
(724)

பிரதிநிதி.
4ம் வருடம் (A)

---

## The Express Institute

தரம் 03- 11 வரையுள்ள
அனைத்து வகுப்புகளும்
வழமை போல் நடைபெறுகின்றன.

இதுவரை சமுகம்தராத ஆசிரியர், மாணவர்கள் அனைவரும் நாளை (புதன்) பி. ப. 3மணிக்கு தவறாது சமுகம் தரவும்.

O/L DAy CLASS ஆசிரியர்கள் உங்கள் வழமையான நேர சூசிப் படி உடன் சமுகம் தரவும்.

A/L வகுப்புகள் வெள்ளி ஆரம்பமாகிறது

அதிபர்.

(719)

---

## அறிவித்தல்

### மக்கள் வங்கி

சாவகச்சேரி மக்கள் வங்கியில் ஓய்வூதியம் பெறுபவர்கள் தமது 2000-வைகாசி மாதத்திற்குரிய ஓய்வூதியத்தை தங்கள் இருப்பிடத்திற்கு அண்மையிலுள்ள மக்கள் வங்கியில் பெற்றுக்கொள்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதென்பதை அறியத்தருகிறோம்.

பிராந்திய முகாமையாளர்
மக்கள் வங்கி,
பிராந்திய காரியாலயம்,
யாழ்ப்பாணம்.

(இ-434)

---

## அவசர கலந்துரையாடல்

சில முக்கிய முடிவுகள் எடுக்கவேண்டியிருப்பதால் அனைத்து 19ம் அணியைசேர்ந்த மாணவர்களும் இன்று(06 - 06 - 2000)மதியம் 1 மணிக்கு தவறாது மருத்துவபீடத்திற்கு சமுகம் தருமாறு கேட்டுகொள்கின்றேன்.

மாணவப்பிரதி நிதி
19ம் அணி,
மருத்துவபீடம்,

[738]

---

## சாவகச்சேரி பிரதேச சபையில் கடமையாற்றும் அனைவரினதும் கவனத்திற்கு

எதிர்பாராத அசாதாரண சூழ்நிலை காரணமாக தமது கடமையாற்றிய, வசித்து வந்த பிரதேசத்திலிருந்து இடம் பெயர்ந்து உள்ள சாவகச்சேரி பிரதேச சபையில் கடமையாற்றிய அனைவரினதும் இன்றைய நிலையை அறிந்துகொள்ள பிரதேச சபை தலைவர் ஆவலாகவுள்ளார். உங்களின் அன்றாட பிரச்சினைகளையும், நீங்கள் எதிர் கொண்டுள்ள இன்னல்களையும் ஆராயும் பொருட்டும், தென்மராட்சி பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு நாம் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்தும் கலந்துரையாடல் ஒன்றை யாழ்.ப.நோ.கூ.ச. தலைமையக கேட்போர் கூடத்தில் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி அளவில் (புதிய நேரம்) ஒழுங்கு செய்துள்ளேன். எனவே உங்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கிறேன்.

அன்ரன் பொன்னையா
தலைவர் சா. பி. சபை

(இ 437)

---

## விஞ்ஞான பீட மாணவர்களுக்கான அறிவித்தல்

அனைத்து விஞ்ஞான பீட மாணவர்களுக்குமான கலந்துரையாடல் (விரிவுரைகள் மீள ஆரம்பிப்பது சம்பந்தமான ) 07- 06- 2000 அன்று காலை 10.30 மணிக்கு தாவரவியல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது எனவே அனைத்து மாணவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியம்
யாழ். பல்கலைக்கழகம்

(இ 439)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா நல்லபிள்ளை

சுன்னாகம் தெற்கை வசிப்பிடமாகக் கொண்ட கந்தையா நல்லபிள்ளை 05 06 2000 திங்கட்கிழமை அன்று பிற்பகல் 2 05 மணியளவில் இறைவனடி சேர்ந்தார். அன்னார் சின்னப்பா கந்தையாவின் அன்பு மனைவியும், சிவனேஸ்வரி, யோகேஸ்வரி (கொலன்ட்), சிவப்பிரகாசம் (கனடா), தியாகலிங்கம் (தலைவர் விவசாய சம்மேளனம் சுன்னாகம்), மகேந்திரலிங்கம் (கனடா), திருமணி ஆகியோரின் அன்புத்தாயாரும், செல்வராஜா (ஓய்வு பெற்ற கலால் உத்தியோகத்தர்), செல்வநாயகம், சீமெந்துக்கூட்டுத்தாபன உத்தியோகத்தர்), (கொலன்ட்), திலகவதி (கனடா). செல்வராணி, ஜெயமலர் (கனடா), சுந்தர்ராஜன் ஆகியோரின் அன்பு மாமியாரும் திருமதி சிறீசுரன், நவகீதா (பிரான்ஸ்), திலீபன் (லண்டன்). தீபகீதா (மாணவி யாழ். உயர் தொழில் நுட்ப நிறுவனப்), இந்துகீதா (மாணவி உடுவில் மகளிர் கல்லூரி), திலீஷ்குமார் (கொலன்ட்), பத்மரூபா (கொலனட்), பத்மராஜி (கொலன்ட்). கிஸ்ணரூபா (கொலன்ட்), விஷ்னுராஜ் (கொலனட்), ஆதவன் (கனடா), ஆதித்தன் (கனடா), ஆரணி (கனடா), தாரணன் (மாணவன் இராமநாதன் கல்லூரி, தாருஜன் (இராமநாதன் கல்லூரி), சோபிதா, மதிபன் (கனடா), மகிசன் (கனடா), ஜேஸ்ரராஜன் (மாணவன் இராமநாதன் கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியும் அனோஜனின் (பிரான்ஸ்) அன்புப் பூட்டியும். காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - தங்கப்பிள்ளை, செல்லர் - கனகசபை, தம்பிராசா - அன்னமுத்து ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 06.06.2000 செவ்வாய்க்கிழமை இன்று 1 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் சுன்னாகம் கொத்தியாலடி மயானத்தில் நடைபெறும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

தகவல்
க. தியாகலிங்கம்
(மகன்)

பழைய பொலிஸ்நிலைய வீதி
சுன்னாகம் தெற்கு
சுன்னாகம்.

(748)

## சிவப்பிரகாசம் குமாரசாமி

திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த சிவப்பிரகாசம் குமாரசாமி 05-06-2000 திங்கட்கிழமை காலமானார். இவர் காலஞ்சென்ற சிவப்பிரகாசம் அம்மாப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், திருமதி பாக்கியத்தின் அன்புக் கணவரும், தருமராஜா (திருநெல்வேலிச்சந்தை), சண்முகராஜா (ஜேர்மனி), வசந்தராணி, நகுலராஜா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ் சென்றவர்களான இராசமணி, கனகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கோணேஸ்வரன் (சுவிஸ்), உதயராணி காலஞ்சென்ற உமாமகேஸ்வரன் ஆகியோரின் பெரிய தந்தையாரும், வேலாயுதபிள்ளை, அன்னம்மா, காலஞ்சென்றவர்களான இராசையா, மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், தவரஞ்சினி, உதயராணி (ஜேர்மனி) ஜெயா (சுவிஸ்), செல்வராஜா (டோகா) சுகந்தி (கனடா), யோகராஜா (யாழ். ப.நோ.கூ. சங்கம்), இராசநாயகம் (திருநெல்வேலி சந்தை) இராசலிங்கம் (விவசாயசேவையாளர் திருநெல்வேலி) இராஜேஸ்வரன் (யாழ். ப.நோ.கூ. சங்கம்). இரத்தினேஸ்வரன் (திருநெல்வேலி சந்தை), இரத்தினகுமாரன் (விவசாய விரிவாக்க நிலையம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சீர்த்திகன், சங்கீதா, தர்மிகா, ஆர்த்திகா, சிந்துஜா, விஸ்ணு, சங்கவி, சாலினி, சஜன், அனுஷா, யோதீஸ், உமாந்தினி, ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் அவரது இல்லத்தில் 06-06 2000 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு நடைபெற்றுத் திருநெல்வேலி இந்து மயானத்தில் அவரது பூதவுடல் தகனம் செய்யப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள், இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தருமராஜா
[மகன்]

பதிவுகாரர் லேன்,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

(742)

## முருகேசு கந்தையா

(தேநீர் கடை உரிமையாளர் சாவகச்சேரி)

சாவகச்சேரியைச்சேர்ந்த முருகேசு கந்தையாமல்லாவியில் 4 6 2000 அகால மரணமடைந்தார் இவர் காலஞ்சென்றவர்களான முருகேசு வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்புப்புதல்வனும், மகேஸ்வரியின் அன்புக் கணவருமானார் சுப்பிரமணியம், இந்திராணி, ஆனந்தராஜா, கனகசபாபதி, செல்வராணி செல்வரட்ணம் [சுவிஸ்] பவானி, ராஜேந்திரம் பவளராணி, மகேந்திரன் (அரியகுட்டி) ஆகியோரின் அன்புத் தந்தையும் மகாலட்சுமி, சுந்தரலிங்கம், கமலாதேவி கிருஸ்ணபகவதி, சந்திரசேகரம் (விநாயகர்ஸ்ரோர் திருநெல்வேலி) ரஞ்சினிதேவி, கிருஸ்ணமூர்த்தி, கலா, வரதராஜா சுகிர்தா ஆகியோரின் அன்புமாமனாருமாவார் இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
கனகசபாபதி (பப்பு)
மகன்
சங்கத்தானை

தற்போதையமுகவரி
ஆஸ்பத்திரிபின்வீதி
சங்கானை

[740]

தென்மராட்சி---

மாலை 3-30 மணி வரை இயங்கிவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

விளக்க---

னர்.

ஆஜர் செய்யப்பட்ட 37 சந்தேக நபர்களையும் இம மாதம் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதவான் உத்தரவிட்டார். (வ-க)

யாழ்.நகர்---

நடை பெறுமானால் இப்பாடசாலையில் மாணவர் வரவு அதிகரிக்குமென சம்பந்தப்பட்ட பாடசாலை வட்டாரங்கள் தெரிவித்ததுடன் எதிர்வரும் புதன் கிழமை முதல் பாடசாலைகள் வழமை நிலைக்குத் திரும்பும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (வ.க)

நோர்வேயின்....

தொடர்பாக இலங்கை அரசு என்னென்ன நிபந்தனைகளை விதிக்க விரும்புகிறது என்பது குறித்து எதனையும் ஜனாதிபதி தெரிவிக்கவில்லை.

சில நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டால் ஒழிய பேச்சுவார்த்தை என்பதனை நினைத்துக் கூட பார்க்க முடியாது எனவும் ஜனாதிபதி தெரிவித்தார். [வ.க]

உலர் . . .

கள் முக்கியஆவணங்களுடன் இவ்வேளை சமுகமளிக்க வேண்டுமென அவரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அரசாங்க அதிபரால் இது சம்பந்தமான சுற்றுநிருபத்தின்பிரதிகள் கூட்டுறவு உதவி ஆணையாளர், பெற்றோலிய கூட்டுத்தாபன பிராந்திய முகாமையாளர், ப.நோ.கூ. ச. தலைவர், பொதுமுகாமையாளர், பேக்கரி உரிமையாளர்சங்கத்தினர் முதலானோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. [ச:வ]

கடற்படை.,

கடற்படையினரின் டோறா பீரங்கிப்படகொன்று மூழ்கிவிட்டதாகவும் மற்றொரு படகு சேதமாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சேதமடைந்த படகிலிருந்த 16 படையினரில் 11 கடற்படையினர் மீட்கப்பட்டதாகவும் மூழ்கடிக்கப்பட்ட படகிலிருந்த படையினரை தேடும்பணி முடுக்கிவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இச்சமரில் விடுதலைப்புலிகள் தரப்பில் 13 கடற் புலிகள் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இக்கடற் சமரில் கடற்படையினருக்கு உதவியாக கிபிர் குண்டு வீச்சு விமானங்களும் ஹெலி கொப்டர்களும் தாக்குதல் நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [வ-ச]

வெற்றிலைக்கேணி.-.

[சிவஞானசம்பந்தமூர்த்தி அரசலிங்கம்] திருகோணமலை

★ மதிவதனன்
[நவரத்தினம் சசிகரன்) யாழ்ப்பாணம்

★ இளஞ்சேரன்
[சோமசுந்தரம் ஜெகதீஸ்வரன்] திருகோணமலை

★ கலைமுகிலன்
[இராமச்சந்திரன் ஜெனனகுமார் ]கிளிநொச்சி

★ மதியழகன்
[முனுசாமி சசிக்குமார்] முல்லைத்தீவு

★ மதிவண்ணன் [ஞானப்பிரகாசம் - அன்ரனிஜெராட்) யாழ்ப்பாணம்.

★ சத்தியவேணி (வேலு சறோஜினி, கிளிநொச்சி.

★ தேசுதா :தியாகராசா பகீரதி) யாழ்ப்பாணம்.

★ மருவாள் (இராசதுரை நேசராணி] . யாழ்ப்பாணம்.

★ அமுதப்பிரியா (அமிர்தநாயகம் மேரிசுலோரன்ஸ்] யாழ்ப்பாணம். [ச-4]

# நியாய விலையில் மண்ணெண்ணெய் பெற முடியாதுவிவசாயிகள் அவலம்

(யாழ்ப்பாணம்)

இக்கட்டான சூழ்நிலையில் நியாயமான விலையில் மண்ணெண்ணெய் பெறமுடியாது யாழ்ப்பாண விவசாயிகள் பெரும் அவலநிலையை அடைந்துள்ளதாக வலிகாமம் கிழக்கு விவசாயிகள் சம்மேளன ஒன்றியதலைவர் அ. கந்தசாமி கவலை தெரிவித்துள்ளார்.

இது விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், வலிகாமம் கிழக்குப் பகுதி விவசாயிகள் பல்வேறு நெருக்கடிகளை சந்தித்து வருகின்ற இவ்வேளையில் கூடிய விலைகொடுத்து மண்ணெண்ணெய பெற்றே தமது விவசாய நடவடிக்கையை தொடரவேண்டியுள்ளது.

இது விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட திணைக்களமோ அல்லது வேறுஅமைப்புக்களோ எதுவித நடவடிக்கையும் எடுக்காமல் அசமந்தப்போக்கையே கடைப்பிடிக்கின்றன என்று மேலும் அவர் தெரிவித்தார்.

(வ. க.)

# அதிகளவான பஸ்கள் சேவையில்

தற்போது வடபிராந்திய போக்குவரத்து சபையினால் மேற்கொள்ளப்பட்டு வரும் மட்டுப்படுத்தப்பட்ட சேவை இன்று முதல் சகல இடங்களுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளது.

தற்போது பிரதான பாதைகளுக்கு சேவையில் ஈடுபடுத்தப்படும் பஸ்களிலும் பார்க்க அதிகளவான பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக வடபிராந்திய போக்குவரத்து சபை பொதுமுகாமையாளர் வி. எஸ். சொக்கலிங்கம் தெரிவித்துள்ளார்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பவளரத்தினம் சுப்பிரமணியம்

வண்ணார்பண்ணை அரசடியைப் பிறப்பிடமாகவும் காரைநகர், சித்தன்கேணியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பவளரத்தினம் சுப்பிரமணியம் அவர்கள் 05. 06. 2000 அன்று காலை விண்ணுலகு எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் இராசம்மா அவர்களின் அன்பு மருமகளும், வண்ணார்பண்ணை அரசடி வேலுப்பிள்ளை பொன்னம்மா அவர்களின் அன்பு மகளும், திருநாவுக்கரசு (ஆசிரியர், வட்டு - இந்துக் கல்லூரி), நவரத்தினம் (உதவிப்பணிப்பாளர் கால்நடை வளர்ப்பு திணைக்களம், வடக்குக் கிழக்கு மாகாணசபை) ஆறுமுகநாதன் [இளைப்பாறிய பிரதம லிகிதர் மாவட்டசபை, மட்டக்களப்பு), ஜெயபாலன் (கணக்காளர் South yemen), தனபாலன் ஹைதரா மணி லிமிடெட், கொழும்பு), இராசலிங்கம் [துரை, ஹொலன்ட்), மகேஸ்வரன் (ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி) நடராசா (கணக்காளர், கனடா), இராசலட்சுமி, லோகேஸ்வரி (இந்தியா), சண்முகநாதன் (தனியார் தொலைத்தொடர்பு நிலையம் யூனியன் பிளேஸ் கொழும்பு) ஆகியோரின் அருமைத் தாயாரும் சித்திராராணி [ஆசிரியை, வட்டு - இந்துக்கல்லூரி), ஞானேஸ்வரி, காலஞ்சென்ற பரமேஸ்வரி, விசாகா (குருநாகல், றஞ்சி [தேர்தல் இலாகா கொழும்பு), மாலா (ஹொலன்ட்), நாகேஸ்வரி, சுலோசனா, இரகுநாதன் [சிறாப்பர், புகையிரத இலாகா மருதானை) நடராசசர்மா (இந்தியா), லிங்கேஸ்வரி (றீறரா, கொழும்பு) ஆகியோரின் அருமை மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 06 - 06 - 2000 இன்று செவ்வாய்க்கிழமை 193/4, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்ற இல்லத்தில் நடைபெற்று காலை 10 மணிக்கு (பழைய நேரம்) தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்-
சு. திருநாவுக்கரசு
சு. மகேஸ்வரன்
[மகன்மார்]

(749)

## திருமதி செல்லத்துரை பவளரத்தினம்

(உரிமையாளர் ராணி வாகனம்)

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த திருமதி செல்லத்துரை பவளரத்தினம் [உரிமையாளர் ராணி வாகனம்] 05 06 2000 திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு செல்லத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி தங்கம்மா தம்பதிகளின் புதல்வியும், பாலச்சந்திரன் காலஞ்சென்றவர்களான செல்வராணி, மகாதேவா, இராமச்சந்திரன், மற்றும் மகேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி நாகரத்தினம், துரைராஜா (கனடா) காலஞ்சென்ற திருமதி முத்துலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பகல் 10.00 மணியளவில் கோம்பயன்மணல் மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
செ. பாலச்சந்திரன் (சந்திரன்)
(மகன்)

மஞ்சவனப்பதிவீதி
கொக்குவில் மேற்கு
கொக்குவில்

(745)

இப்பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000ஆம் ஆண்டு யூன் மாதம் 06 -ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.